60 ஆண்டுகளுக்குப் பிறகு, தேவையை உணர்ந்து செய்திருக்கிறார்கள். எனவே, இப்போது அங்கே ஒரு கோட்டம் புதிதாக அமைக்கவேண்டிய அவசியம் இல்லை என்று இந்தத் துறை கருதுகிறது. மாறாக செங்கத்தைத் தலைநகராக வைத்து ஒரு வனச்சரகம் மிகச் சிறப்பாகச் செயல்படுகிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை ஏற்றுக்கொள்வதற்கு வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 136, திரு எஸ்.எம். கிருஷ்ணன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

136—

அரசுக் கல்லூரிகளில் ஒப்பந்த ஆசிரியர்களை நிரந்தரம் செய்தல்.

10915—திரு. எஸ். எம். கிருஷ்ணன் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசுக் கல்லூரிகளில் ஒப்பந்த முறையில் பணியாற்றும் சுமார் 360 ஆசிரியர்களை நிரந்தரம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு அலுவலர் நலனில் மிகுந்த அக்கறை காட்டும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் அனுமதியோடு, 26-3-1993 முதல் அரசுக் கல்லூரிகளில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் ஆசிரியர்களை முறையான பணிக்கு உட்கொணர அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 137, திரு. எச்.எம். ராஜு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

137—

ஊட்டி அரசினர் கலைக்கல்லூரியில் பட்ட மேற்படிப்பு வகுப்புகள் துவங்குதல்.

21193—திரு. எச்.எம். ராஜு :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊட்டியில் உள்ள அரசினர் கலைக் கல்லூரியில் எம்.ஏ. வரலாறு, ஆங்கிலம், எம்.காம்., எம்.எஸ்.சி., கணிதம், விலங்கியல் ஆகிய பட்ட மேற்படிப்பு வகுப்புகள் துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊட்டி அரசுக் கல்லூரி ஆரம்பித்து சுமார் 40 ஆண்டுகள் ஆகின்றன. மாணவர்கள் பட்ட மேற்படிப்புக்குக் கோவை, மதுரை, திருச்சி, சென்னை போன்ற இடங்களுக்குச் சென்று வருகிறார்கள். எம்.ஏ.(வரலாறு), எம்.ஏ.(ஆங்கிலம்), எம்.காம்., எம்.எஸ்.சி.(கணிதம்), எம்.எஸ்.சி.(விலங்கியல்) போன்ற பாடங்களுக்குப் புதிதாக வகுப்பறைகள் அவசியப்படுவது இல்லை, புதிதாக ஆசிரியர்கள் அல்லது பேராசிரியர்கள் அவசியப் படுவதில்லை. அரசுக்குப் புதிய செலவினங்கள் இல்லை. ஆகவே வரும் ஜூன் மாதத்திலாவது இந்தப் பட்ட மேற்படிப்புகள் அங்கே ஆரம்பித்து, மாணவ மக்களுடைய நீண்டகாலமான விருப்பத்தை அரசு நிறைவேற்றுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக் கல்லூரிகளில் பகுதி-2 திட்டத்தின்கீழ், அரசு ஒதுக்கீடு செய்யும் நிதிக்கேற்றபடிதான் புதிய பட்டம் மற்றும் பட்டமேற்படிப்புப் பிரிவுகள் தொடங்கப்படுகின்றன. தமிழகத்தின் முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய கணிப்பொறி. அறிவியல் போன்ற பட்ட வகுப்புகளை மட்டுமே தொடங்க அனுமதி அளிக்கவேண்டுமென்று அறிவுறுத்தியிருக்கிறார்கள். இந்த அடிப்படையில் முன்மொழிவுகள் பெறப்படுமானால் நிதிநிலைமைக்கேற்ப அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதுபோல, அரசுக்கு இதில் செலவினங்கள் இல்லை. செலவினங்கள் இல்லாத காரணத்தினால் எம்.ஏ.(வரலாறு), எம்.ஏ.(ஆங்கிலம்), எம்.காம்., போன்ற பாடங்கள் கண்டிப்பாக அரசால் இந்தக் கல்லூரிக்குக் கொண்டுவர முடியும். ஆகவே வரும் ஜூன் மாதத்தில் இந்தப் பட்ட மேற்படிப்புகளாவது அங்கே ஆரம்பிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவைக்கேற்பவும், மற்றும் அந்தப் பகுதியிலே இருந்து வருகிற மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்பவும் இந்தக் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 138, திரு ஜி. பழனிசாமி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.